RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s1989

# இரட்டைக்காப்பியம் காட்டும் அற ஓவியக்கோட்பாடுகள்

க. சுவாதி [அ, *], எ. கற்பகம் [அ]

[அ] தமிழாய்வுத்துறை, அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), கரூர்-639007, தமிழ்நாடு, இந்தியா

# Moral Painting Theories in Irattai Kappiyam

K. Swathi [a, *], E. Karpagam [a]

[a] Research Department of Tamil, Government Arts College (Autonomous), Karur-639007, Tamil Nadu, India

* Corresponding Author: thikamal12@gmail.com

Received: 13-07-2022
Revised: 01-10-2022
Accepted: 17-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Kappiyam are one among the literary forms. It is divided into Perungappiyam and Sirukappiyam. Virtue, materiality, pleasure, home, and a familial life of a husband and wife are the most important in Perungappiyam. This expands into oral literature, self-conscious songs and public songs. Sirukappiyam is a book that rejects all those four subjects of Perungappiyam and it deals with materiality. As Kappiyam we always remember the Aiperum Kappiyam from Silapathikaram to Chintamani and the Ainchiru Kappiyam from Chulamani to Neelakesi. However, Periyapuranam, Kamparamayanam, Villibharathalam, Bharathidasan's Pandyan Parisu, Pulavar Kulanthai's Ravana Kaviyam, Kannadasan's Yaesu Kaviyam are considered as Kappiyam. Among these Tamil Kappiyam's Silapathikaram, Manimekalai and Periyapuranam have been composed using Tamil folk narrative sensibilities. Other Kappiyam's are the adaptations from other Sanskrit and Prakrit languages. Silappathikaram and Manimegalai are known as Irattai Kappiyam because they were created at the same time and their stories are also related to each other. Silapathikaram was composed by Ilangovadigal and Manimekalai by Seethalaichathanar. The characters in these kappiyams are called related to each other and so it is called Irattai Kappiyam. This article examines the moral painting theories in Irattai Kappiyam.

**Keywords:** Painting Theories, Irattai Kappiyam, Silapathikaram, Manimekalai

## முன்னுரை

ஓவியக்கலை தொன்மையான வரலாற்றைக் கொண்டதாகும். பல்வேறு காலகட்டங்களை சேர்ந்த ஓவியங்கள் முழுமையாகவும் சிதைந்த நிலையிலும் குகைகளிலும் பழமையான அரண்மனைகளிலும் கோயில்களிலும் வேறு கட்டிடங்களிலும் காணப்படுகின்றன. அவ்வாறு காணப்படும் ஓவியங்கள் தமிழ் இலக்கியத்தில் இடம் பெறுகின்றது. சங்கப் பாடல்களிலும், சங்கமருவிய காலங்களிலும் ஓவியம் பற்றிய தகவல்கள் இலக்கியங்களிலும் உள்ளன. ஓவியச் செந்நூலுரைநூற் கிடக்கையும் என்ற சிலப்பதிகாரம் வரிகள் ஓவிய சம்பந்தமான நூல்கள் இருந்தமையை அறிவிக்கின்றது. மணிமேகலை நூல் ஓவிய நூல் என்றும் வழங்கப்படுகிறது (Chellappan, 1994).

## இரட்டைக்காப்பியம் கூறும் அற செய்திகள்

சிலம்பு உணர்த்தும் முப்பெரும் உண்மைகள் அரசியல் பிழைத்தோற்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

அரசியல் பிழைத்தோற்க்கு அறமே கூற்றாக அமைந்து அவர் உயிரைப் போக்குவதும், புகழ் மிகுந்த பத்தினிக்கு சான்றோரின் போற்றுவதும், புகழ் மிகுந்த பத்தினிக்கு சான்றோரின் போற்றுதல் உண்டாகும் முன் செய்த ஊழ்வினையானது பிற்பிறவியில் சினந்து வந்து, அதற்குரிய பயனை ஒருவருக்கு ஊட்டும் என்பதையும் சிலப்பதிகாரம் காட்டிய வாழ்வியல் நெறிகள் ஆகும்.

## மணிமேகலை வழிகாட்டும் அறங்கள்

உணவு, உடை, உறையுள், மருந்து ஆகிய நான்கும் ஒரு மனிதனுக்குக் கிடைக்க வேண்டிய கடமை என திசயா காணாம் என்னும் பௌத்த நூல் கூறினாலும் முதன் முதலில் அமுதசுரபியில் உணவு படைக்கும் ஆதிரை மணிமேகலையில் தான் இடம் பெற்றுள்ளது. "பாரகம் அடங்கலும், பசிப்பிணி அரக" என்று சொல்லிச் சோற்றை இடுகிறாள்.

பௌத்த மதக்கோட்பாடுகள் ஒழுக்கநெறி அரசுநெறி பசிப்போக்கும் அறமாண்பு சிறைகோட்டங்களை அறக்கோட்டமாக மாற்றியமைத்தல், கள்ளுண்ணாமை, பரத்தன்மை ஒழித்தல் போன்ற சமுதாய சீர்திருத்த நிரந்தர அறமான கருத்துக்களை வெளிப்படுத்துவதே ஆகும். அறக்கருத்துகளின் நிலையாமை, கள்ளுண்ணாமை, பசிப்பிணி பற்றி வெளிப்படுத்த மணிமேகலைக் காப்பியம் இளமையோடு இருக்கிறது.

## யாக்கை நிலையாமை

யாக்கை என்பது உடலும், உயிரும் கட்டிக்கொண்டு இருக்கும் நிலைமை. எலும்பு, தசை, நரம்பு முதலான நிலப்பொருள்களும், குருதி போன்ற நீர்ப்பொருளும், சூடு போன்ற தீப்பொருளும், மூச்சோட்டமாகிய காற்றுப் பொருளும் உயிரோட்டமாகிய ஆகாயப்பொருளும் என ஐம்பூதப் பொருளும் ஒன்றோடொன்று கட்டிக்கொண்டு இயங்குவது. யாக்கை என்பது தமிழ்நெறி இக்கருத்துகளுக்கெல்லாம் அரண் செய்யும் வகையில் மணிமேகலையில் சாத்தனார் நிலையாமை கருத்துக்களைப் பாத்திரங்கள்வழி விளக்குகின்றார். உதயகுமரன், மணிமேகலையின் திறம் குறித்து சுதமதியிடன் வினவுகின்றான். அப்போது அவள் யாக்கையின் நிலையாமையைக் கூறுகின்றாள்.

மனிதன் இளமை நிலைபேறுடையது என்று உணர்கின்றான். அவன் அறச்செயல்களைப் புரிவதற்கே இளமை என்று உணரவேண்டும். எனவே, மணிமேகலை உதயகுமரனிடம் ஒரு நரை மூதாட்டியைக் காட்டி இளமையின் நிலையாமையை விளக்குகிறாள்.

## செல்வம் நிலையாமை

யாக்கை நிலையாமை செல்வம் நிலையாமை ஆகியவற்றை இக்காவியம் ஆழமாகக் கற்பிக்கின்றது. சக்கரவாளக் கோட்டத்தை இதற்காகவே புலவர் அறிமுகம் செய்தார்.

## கள்ளுண்ணாமை

பெண்களும், கள்ளும், உணவும் இல்லாமல் உலகத்திலே மக்கள் அடையக்கூடிய ஏதேனும் உண்டோ? என்று நாகரீக தலைவன் கேட்டான். அப்போது சாதுவன் சொல்வதாக மதுரை கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் கூறியுள்ளார் (chellappan, 1994).

## இரட்டைக் காப்பியங்கள்

தமிழிலுள்ள காப்பியங்களாகிய சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைப்பர். இவை சங்க காலத்திற்குப் பின் தோன்றியவை இக்காப்பியங்களிலும் ஓவியம் பற்றியப் பல செய்திகள் இடம் பெற்றுள்ளன.

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தில் ஓவியத்தினைப் பற்றிய பல அரிய குறிப்புகள் காணப்படுகின்றன. சிலப்பதிகாரத்திலும் ஓவியக் கலைஞர்கள் கண்ணுள் வினைஞர் என்று குறிப்பிடப்படுகின்றனர். ஓவியம் வரையப்பட்ட திரைச் சீலைகள் பற்றிச் சிலம்பு தெரிவிக்கிறது (chellappan, 1994). மாதவியின் நடனம் அரங்கேற்றப்பட்ட மேடையில் இத்தகைய ஓவியத் திரைச் சீலைகள் பயன்படுத்தப்பட்டன. இவை ஓவிய எழினி என்று அழைக்கப்பட்டன. அரங்கேற்ற மேடையின் விதானத்தில் அனைவரும் தொழுது போற்றும் படியாக நால்வகை வருண பூதங்களின் உருவங்களை ஓவியமாக எழுதி வைத்தனர். மேடையின் மேல் விதானம் அழகுறக் காட்சியளிப்பதற்குச் சித்திரம் வரைந்த திரைச் சீலைகளைக் (மேற்கட்டி) கட்டி வைத்தனர் என்று சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையால் அறிய முடிகிறது.

சுவர் ஓவியங்களே தமிழகத்தில் பழமையானவை. மரப்பலகை, கிழி எனப்பட்ட துணிச்சீலைகளிலும் ஓவியங்கள் வரையப்பட்டன. துணியில் ஓவியம் வரைவதே படம் எனப்பட்டது. திரைச்சீலையிலும் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. சிலப்பதிகாரம் இதை ஓவிய எழினி என்கிறது. பண்டைக் காலத்தில் அரண்மனை, செல்வந்தர்களின் மாளிகை, கோயில் மண்டபங்களில் ஓவியங்கள் வரையப்பட்டன. அரண்மனைகளில் சித்திரமாடம் என்ற தனிக் கட்டிடம் இருந்தது. பாண்டியன் நன்மாறன் எனும் அரசன் சித்திரமாடத்தில் இருந்த போதுதான் உயிர் நீத்தார். அவரை சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று புறநானூறு கூறுகிறது.

சிலப்பதிகார கதாபாத்திரம் மாதவி நாடக நடிகை, பல வகை கலைகளைக் கற்றவர் ஓவியக் கலையையும் அவர் கற்றிருக்கிறார்.

ஓவியத்தைக் கற்பதற்குத் தனி நூல் இருந்தது. இதன் மூலம் தெரிய வருகிறது. மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற்கூரையில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்தன. அதற்கு "ஓவிய விதானம்" என்று பெயர். அதைப்போல் அரசன் அரசி அறைகளிலும் மேற்கூரைகளிலும், ஆடைகளிலும் ஓவியங்கள் வரைந்திருக்கிறார்கள். அந்த வகையில் சுவர், மண்டபக் கூரை, திரைச்சீலை, ஆடை, கேடயம் எனப் பயன்பாட்டுப் பொருட்கள் மீது அந்த காலக்கட்டத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டு இருந்துள்ளது.

"முத்துநிரைக் கொடித் தொடர் முழுவதும் வளைஇய
சித்திர விதானத்துச் செய்பூங் கைவினை
இலங்கொளி மணிநிரை யிடையிடை வகுத்த
விலங்கொளி வயிரமொடு பொலந்தகடு போகிய
மடையமை செலவின் வான்பொற் கட்டில்"

எனும் பாடலால் சேரன் செங்குட்டுவனது மனைவியுடைய அந்தப்புரத்தில் உள்ள அறையின் மேற்கூரையில் ஓவியங்கள் நிறைந்த கொடி தொடர் போன்று வரையப்பட்ட தன்மையையும் சுட்டிக் காட்டுகின்றது (chellappan, 1994).

"செம்பியன் மூதூர்ச் சென்றுபுக் காங்கு
வச்சிரம் அவந்தி மகதமொடு குழீஇய
சித்திர மண்டபத்திருக்"

என வரும் சிலப்பதிகாரம் தொடரால் சோழ மன்னனது பழமை மிக்க நகரில் வச்சிரம், அவந்தி, மதம் ஆகிய நாட்டவரால் அழகுடன் செய்யப்பட்ட ஓவியங்கள் நிறைந்த கலைக் கூடங்களாகவும் அமைந்த செய்தியினைக் காண முடிகின்றது (chellappan, 1994).

"அலத்தகம் ஊட்டிய அஞ்செஞ் சீறடி"

என மாதவியின் வண்ண அலங்கார வரைவுகளை இளங்கோவடிகள் கூறுகின்றார் (chellappan, 1994).

## ஓவிய எழினி

"ஓவிய எழினி முழவுடன் போக்கு"

விதானித்துப் படுத்த வெண்கால் அமளின்"

என்னும் சிலப்பதிகார வரிகளால் ஓவிய எழினி இருந்த மையைக் காணமுடிகின்றது. ஓவிய எழினி என்பது ஓவியங்கள் வரையப்பட்ட திரைச்சீலையாகும் (chellappan, 1994).

கோவலனும் மாதவியும் காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் புன்னை மரத்து நிழலில் ஓவியம் வரையப்பட்ட திரைச் சீலைகளை அறைபோன்று கட்டி மறைவாக்கி அதனுள் கட்டிலின் மீது இருந்தனர் என்று சிலம்பின் கடலாடு காதை உரைக்கிறது.

"புன்னை நிழற் புதுமணற் பரப்பில்"[5]

ஓவிய எழினி சூழவுடன் போக்கி

விதானத்துப் படுத்த வெண்கால்" (chellappan, 1994).

## ஓவிய நூல்

ஓவிய நூல் பற்றி மணிமேகலை குறிப்பிடுகிறது. நாட்டிய மகளிர் ஓவிய நூலினைக் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டும். அதன்படி மாதவி அந்நூலினைக் கற்றுத் தேர்ச்சி பெற்றவளாக விளங்கினாள் என்று மணிமேகலை குறிப்பிடுகிறது.

"நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த"

ஓவியச் செந்நூல் உரைநூற்

கிடக்கையும்

கற்றுத்துறை போகிய பொற்றொடி

நங்கை"

சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் என்ற உரையாசிரியர் தமது காலம் வரை இருந்த ஓவிய நூலிலிருந்து மேற்கோள் பாடல் ஒன்றைத் தனது உரையில் எடுத்துக் காட்டியுள்ளார் (Silamboli chellappan, 1998). எனவே, தமிழில் எழுதப்பட்ட இந்நூல் தமிழ் நாட்டில் நீண்ட கால வழக்கிலிருந்து மறைந்துள்ளது. தமிழர்கள் ஓவியக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர் என்பதற்கு இந்நூல் சான்றாக உள்ளது.

## மணிமேகலையில் ஓவியமும் ஓவியரும்

சித்திரம் வரைவோர் மணிமேகலையில் ஓவியர், ஓவிய மாக்கள், வித்தகர் என்று குறிப்பிடப்படுகின்றனர். ஓவியத்தை வட்டிகைச் செய்தி என்று மணிமேகலை கூறுகிறது. வட்டிகளில் வண்ணங்களைக் கொண்டு சித்திரம் வரைவதால் ஓவியம் வட்டிகைச் செய்தி என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

## புனையா ஓவியம்

புனையா ஓவியம் பற்றி மணிமேகலையில் பல இடங்களில் வருகின்றது. வீட்டினுள் புகுந்து எளிய கோலத்துடன் அலங்காரம் புனைவின்றி அசையாது நின்ற மணிமேகலையைப் புனையா ஓவியத்திற்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார் சாத்தனார்.

"மனையகம் புகுந்து மணிமே கலைதான்"

புனையா ஓவியம் போல நிற்றலும்

"புனையா ஓவியம் புறம்போந் தென்ன"

ஓவியத்தில் வரையப்படும் உருவங்களை வண்ணங்களைக் கொண்டு தீட்டும் வழக்கத்திற்கு முன்பாக அவற்றைக் கோடுகளால் ஆன உருவமாக மட்டும் வரைவர். இத்தகைய கோடாக வரையும் ஓவியங்கள் பற்றிச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. இதனை புனையா ஓவியம் என்று பெயரிட்டு அழைத்ததையும் அறிய முடிகிறது (Silamboli chellappan, 1998).

தலைவனைப் பிரிந்தால் மிகுந்த ஆடை அலங்காரம், புனைவுகள் இல்லாமல் வருத்தத்துடன் எளிமையாகக் காட்சியளித்த தலைமகளை (பாண்டிமா தேவி) நெடுநல்வாடை புனையா ஓவியம் போல இருந்த்தாகத் தெரிவிக்கிறது.

"புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்'

இவ்வடிக்கு உரையெழுதிய நச்சினார்கினியர், "வண்ணங்களைக் கொண்டெழுதப் படாத ஓவியம்" என்று பொருள் கூறுகிறார் (Silamboli chellappan, 1998).

## வட்டிகைச் செய்தி

பூம்புகாரில் தன் காதலியுடன் யாழ் வாசித்துக் கொண்டிருந்த எட்டி குமரன் திடீரெனச் சிந்தனை வயப்பட்டவனாய் ஓவியம் போன்று அசைவற்று இருந்தான். அசைவற்று இருந்த அவன் நிலையை வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவை போன்று இருந்ததாகச் சீத்தலைச் சாத்தனார் தெரிவிக்கின்றார்.

"தகரக் குழலாள் தன்னொடு மயங்கி"

மகர யாழின் வான்கோடு தழீஇ

வட்டிகைச் செய்தியின் வரைந்த

பாவையின்

எட்டி குமரன் இருந்தோன்"

சித்திரம் வல்ல ஓவியர் தமது கைத்தொழிலால் சிறப்புடன் வரைந்து வைத்த ஓவியச் சீலையைப் போர்த்தியது போன்று உவ்வனம் (ஒரு தோட்டம்) பூம்புகாரில் இருந்தது என்று மணிமேகலை கூறுகிறது (Silamboli chellappan, 1998).

"வித்தகர் இயற்றிய விளங்கிய"

கைவினைச்

சித்திரச் செய்கைப் படாம் போர்த்

ததுவே

ஒப்பத் தோன்றிய உவவனம்"

வட்டிகைப் பலகைக் கொண்டு ஓவியம் வரையப்பட்டதால் வட்டிகைச் செய்தி என்று ஓவியத்தினை மணிமேகைலை குறிப்பிடுகிறது. வட்டிகை மணிப்பலகை என்று சீவக சிந்தாமணி குறிப்பிடுகிறது. மேலும், ஓவிய வண்ணங்கள் நிறைந்த பல கலன்களை வைத்துக் கொண்டு ஓவியம் வரைந்ததையும் தெரிவிக்கிறது. வண்ணங்கள் நிறைந்த வட்டிகைப் பலகை என்று காளிதாசர் குறிப்பிடுகிறார் (Silamboli chellappan, 1998).

## ஓவியம் இடம் பெறும் இடங்கள்

துறவிகள் உறைந்த தவச்சாலைகள் பெரிய மாளிகை, வீடுகள் ஆகியவற்றில் ஓவியங்கள் வரைந்து வைக்கப் பட்டிருந்தாக மணிமேகலை குறிப்பிடுகிறது வஞ்சி மாநகரில் புத்தத் துறவிகள் இருக்கும் தவச் சாலையில் ஓவியம் வரையப் பட்டிருந்ததாக மணிமேகலை குறிப்பிடுகிறது.

“சாலையும் கூடமும் தமனியப்”

பொதியிலும்

கோலங் குயின்ற கொள்கை

யிடங்களும்”

காவிரிப்பூம் பட்டினத்தில் சுடு மண்ணால் (செங்கல்லால்) கட்டப்பட்ட வீடுகளின் வெளிப்புறத்தில் பூசப்பட்ட வெண்சுதையில் ஓவியங்கள் வரையப் பட்டிருந்தன. இவற்றில் வானவர் முதலிய பலவகை உயிர்களின் உருவங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டிருந்தன (Silamboli chellappan, 1998).

அவ்வழியே சென்ற மக்கள் கண்ணைக் கவர்ந்த இவ்வோவியங்களைக் கண்டு மகிழ்ந்து நின்று கொண்டிருந்தனர் என்று மணிமேகலை குறிப்பிடுகிறது.

“வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்

சுடுமண் ஓங்கிய நெடு நிலை

மனைதொறும்

மையறு படிவத்து வானவர் முதலா

எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி

வெண்சுதை விளக்கத்து வித்தகர்

இயற்றிய

கண்கவர் ஓவியங் கண்டுநிற் குநரும்”

“ஓவியன் உள்ளத்து உள்ளியது வியப்போன்”

என்னும் கூற்றால் உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சிகளை வடிவமாக்கி வழக்கக் கூடிய வல்லமையுடையோர் என்பதைக் காட்டுகின்றது (Silamboli chellappan, 1998).

“ஓவியச் செந்நூல் உரைநூர் இடக்கையும்”

என்னும் மணிமேகலையில் தொடரால் ஓவிய நூல்களும் அவை பற்றிய விளக்க உரைகளும் இருந்தமையைக் காட்டுகின்றது (Silamboli chellappan, 1998).

“வெண்சுதை விளக்கத்து வித்தசர் இயற்

றிய கண்கவர் ஓவியம்”

என்னும் மணிமேகலைத் தொடரால் அறியமுடிகின்றது திருக்கழுகுமலை மும்மணிக்கோவை ஓவியம் அமைத்த அழகிய வடிவினை கூறுகிறது (Silamboli chellappan, 1998).

“பொன்னிற் பொலிந்த நிறம்”

பலவகை நிறங்கள் இருந்ததைக் காட்டுகின்றது (Silamboli chellappan, 1998).

“செம்பு செய்ஞ்ஞரும் சஞ்ச காரரும்”

பைம் பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்

மரங்கொல் தச்சரும் மண்ணீய டாளரும்

வரம்தர எழுதிய ஓவிய மாக்களும்

தோலின் துன்னரும் துன்ன வினைஞரும்"

செம்பு உலோகத்தில் படிமம் செய்யும் கஞ்சகாரர், பொன் அணிகலன் செய்யும் பொற்கொல்லர், மரப் பொருள்கள், செய்யும் தச்சர், மண்பொம்மை செய்வோர் ஆகியோர் வாழும் தெருக்களில் வரம் தரும் தெய்வ உருவம் எழுதும் ஓவியர் வாழ்ந்தனர் என்று ஓவியர்களைக் குறிப்பிடுகிறது (Silamboli chellappan, 1998).

## முடிவுரை

சிலப்பதிகாரம் மணிமேகலையில் அற ஓவியங்கள் பற்றி செய்திகள் கூறப்பட்டுள்ளன. காப்பிய மக்கள் தங்கள் வாழ்வியல் முறையில் அறத்தோடு சேர்ந்த கலை வளர்ச்சியில் ஓவியத்தின் பங்கு விளக்கப்பட்டுள்ளது. ஓவியக் கலையின் வளர்ச்சியும் அறத்தோடு போற்றி வளர்த்தம்மையை அறிய முடிகிறது. ஓவிய நூல், ஓவியத்திற்கு காப்பிய மக்கள் கொடுத்த முக்கியதுவத்தை அற செய்திகளில் இடம் பெறும் ஓவியக் குறிப்புகள் மூலம் கூறப்பட்டுள்ளது. ஓவிய எழினி, ஓவிய நூல், வட்டிகைசெய்தி, ஓவியம் இடம் பெறும் இடம், ஓவியக் கலைஞர்கள் என இரட்டைகாப்பியங்களில் அறத்தோடு வெளிப்பட்டதைக் காண முடிகிறது.

## References

Chellappan, K. (1994) Silapathikaram Theylivurai, Chennai, India.

Silamboli chellappan, (1998) Manimegalai Mollamum Uraiyum, Bharathi pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License